PDNL
# PALAYAMKOTTAI DIOCESE NEWS LETTER

Vol.54 OCTOBER 2026 No. 01



"The Rosary is a spiritual weapon in the struggle against evil, against all violence, for peace in hearts, in families, and in society." - Pope Benedict XVI

# ADMINISTRATOR SPEAKS

Dear Fathers, Sisters, Brothers, and Lay Faithful,

Warm greetings to you in the blessed name of our Lord Jesus Christ.

As we joyfully celebrate the Feast of Our Lady of the Rosary on 7 October, the Church invites us to place ourselves once again in the school of Mary, the mother of Jesus and our Mother. The Rosary is not merely a traditional devotion; it is a prayer that leads us into the heart of the Gospel. As we move prayerfully through the mysteries of Christ's life, we contemplate with Mary the mystery of salvation and learn to follow her Son more faithfully.

The Blessed Virgin Mary was a woman of deep faith, attentive listening, and generous obedience. At the Annunciation, she surrendered herself completely to God's plan, saying, "I am the handmaid of the Lord. Let it be with me according to your word" (Luke 1:38). Her entire life became a response to God's Word. The Rosary helps us to make the same response in our own lives. With every Hail Mary, we place ourselves beside Mary and allow the events of Christ's life to become part of our own meditation.

The Rosary also teaches us the power of prayerful perseverance. In the Acts of the Apostles, we find Mary gathered with the disciples in prayer as they awaited the coming of the Holy Spirit (Acts 1:14). She remains a model of a praying Church. When families pray the Rosary together, they create a sacred space in which faith is strengthened, forgiveness is nurtured, and unity is deepened.

In our present world, filled with anxiety, distractions, conflicts, and uncertainties, the Rosary offers us a simple yet profound path to peace. Pope St. John Paul II beautifully described the Rosary as a "school of Mary", because through it we learn to

contemplate Christ with the eyes and heart of His Mother. The Rosary does not take us away from the realities of life; rather, it helps us to face them with faith and hope.

The mysteries of the Rosary also speak directly to our daily experiences. The Joyful Mysteries remind us that God enters ordinary human life. The Sorrowful Mysteries teach us that suffering, when united with Christ, is not meaningless. The Glorious Mysteries proclaim that death does not have the final word. The Luminous Mysteries invite us to contemplate Christ's public ministry and to become witnesses of His light.

As a Diocese, may we rediscover the beauty of praying the Rosary in our homes, parishes, religious communities, institutions, and prayer groups. Let parents teach their children this beautiful prayer. Let the elderly hand on their faith to the younger generation. Let our parish communities become communities of prayer, where Mary continually leads us to Jesus.

On this blessed feast, let us entrust our Diocese, our families, our priests, religious, children, youth, and all those who are suffering to the maternal care of Our Lady of the Rosary. May Mary teach us to listen to God's Word, treasure it in our hearts, and put it into practice.

Our Lady of the Rosary, pray for us and lead us always closer to Jesus.

Yours devotedly in Christ,



**Rev. Fr. Motcharajan Michael**
Administrator
Diocese of Palayamkottai.

## ADMINISTRATOR'S ENGAGEMENTS

**October - 2026**

| Date | Time | Programme |
|---|---|---|
| 03-10-2026 | 06: 00 pm | Feast Mass, Arulagam |
| 08-10-2026 | 06:00 pm | Home Day Celebration, Saranalayam |
| 10-10-2026 | 10:00 am | Laity Commission General Body Meeting, JPC |
| 11-10-2026 | 03:00 pm | Youth Competition, CBSE School |
| 16-10-2026 | 06:00 pm | Feast Mass, Maharaja Nagar |
| 18-23 | | Annual Retreat, PILLAR |

## FROM DIOCESAN ADMINISTRATORS' DESK

**Announcements**

**Dear Brother Priests**

**Annual Retreat:**

As informed earlier, we have our Annual Retreat from 18th October to 23rd October at Pillar, Madurai. Fr. Sundar Willson OFM Cap of Anugrha is the retreat preacher. We start our retreat with a rosary at 8.40 p.m. So, please be at the retreat centre on 18th October for supper at 8 p.m. Kindly bring your CASSOCK AND BREVIARY.

Those who are unable to attend the retreat due to grave reasons please get permission from our Administrator and inform me.

A vehicle is arranged to go to the retreat centre from Palayamkottai. Those who want to make use of this facility please inform Fr. Procurator.

**Fr. Motcharajan M.**

**Diocesan Administrator**

# ANNIVERSARIES

## BIRTHDAYS




02 / 10/ Fr. Joe Michael Selvaraj (Joemics)

05 / 10/ Fr. Bosco Gunaseelan P.

15 / 10/ Fr. Antony Joseph SVD

25 / 10/ Fr. Rex Justin S.

28/ 10/ Fr. Jude Meril

30 / 10/ Fr. Sahaya Chinnappan L.

Dear Fathers, with heartfelt joy we wish you a Happy Birthday and many more happy returns of the day. May God shower His Grace on your life!

## ORDINATION DAY



16 / 10 / 2022 Fr. Kulandairaj A. MF

18 / 10 / 2020 Fr. Michael Prakasam

22 / 10 / 1989 Fr. Jamels James

28 / 10/ 1982 Fr. Charles M.

Dear Fathers, we praise God for your Priesthood and your service to His people. May the Power of His Spirit guide you in your ministry and all through your life! HAPPY ORDINATION DAY.

## FEAST DAY

**04 / 10 / St. Francis of Assisi**

Fr. Francis Xavier S.

Fr. Gerry Thisai (S. Gerard Majella Francis)

Fr. Immanuel Francis Raj

Fr. Maria Francis P.

Minor Capuchins of OFM (Cap)

Franciscan Sisters of O.L. of Bonsecours

Franciscan Sisters of Mary



Franciscan Sisters of St. Joseph

Franciscan Sisters of St. Thomas

Clarist Franciscan Missionaries of the Most Blessed Sacrament

Congregation of The Teresian Carmellites (CTC)
Order of the Discalced Carmelites (OCD)

**28 / 10 / St. Simon and Jude, Apostles**

Rt Rev. A. Jude Paulraj

Fr. Simon Selvan I.

Dear Bishop, Fathers and Sisters, HAPPY FEAST on your patron Saints' day! We pray that your hearts be filled with His Love and Grace. May your Patron Saints protect you and guide your ministry.

## NECROLOGY



18 / 10 / 2001 Rt. Rev. S. Iruthayaraj

04 / 10 / 2003 Fr. Rajarathinam

05 / 10 / 1979 Fr. Robert Ponnaiah

10 / 10 / 1983 Fr. Maria Michael

We remember our beloved Bishop Rt Rev. S. Iruthayaraj and Rev. Fathers on their anniversary and pray for their Eternal Repose. May their souls rest in peace!

## பொதுநிலையினர் பணிக்குழு

### 2026 - செப்டம்பர் மாத பணியறிக்கை

பொதுநிலையினர் பணிக்குழு குடையின் கீழ் 02.08.2026 அன்று அறிமுகம் செய்யப்பட்ட '**ஒலிவ நிழல்**' என்ற மூத்தவர் நலன் பேணும் ஊழியத்தின் தொடக்க விழா 13.09.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு தேம்பாவணித் தோட்டத்தில் நடைபெற்றது. கல்வெட்டான்குழி பங்குத்தந்தை அருட்திரு. ஜா. அமிர்தராஜ சுந்தர் தலைமையேற்று தலைமையுரை ஆற்றி ஊழியத்தை உற்சாகத்தோடு தொடங்கி வைத்தார். பேராலயப் பங்குப் பேரவைத் துணைத் தலைவரும்





ஆதித்தனார் கல்லூரியின் ஆங்கிலத் துறைத் தலைவருமான ஓய்வுபெற்ற பேராசிரியர் கு. சேவியர் அமல்ராஜ் சிறப்புரை ஆற்றினார். திருமதி. தாமஸ் ஜோஸ்பின் ரெஜினா விவிலிய வாசகப் பகுதியை வாசித்தார். திருமதி. ஸ்டெல்லா ஹெப்ஸி ஜெசிந்தா “இறைவாக்கு என் ஒளிவிளக்கு” என்ற தலைப்பில் அவரை அழமாகத் தொட்ட விவிலியப் பகுதிகளை விரித்துரைத்தார். மறைமாவட்ட அன்பிய ஒருங்கிணைப்பாளர் திருமிகு. A. ஜான். இருதயராஜ் “மனந்திறந்து; மடை திறந்து” என்ற தலைப்பில் அவருடைய உடம்பை ஓம்புகிற உபாயத்தைப் பகிர்ந்து கொண்டார்.



திருமணப் பொன்விழா காணுகிற தம்பதியர் திரு. ராஜேந்திரன் திருமதி. மரிய ஜெய ராஜாத்தி அவர்களும் செப்டம்பர் மாதம் பிறந்த நாள் கொண்டாடுகிற திருமதி. பிலோமினாள் செல்லத்தாய் அவர்களும் நூலாடை அணிவிக்கப்பட்டு பாராட்டப் பெற்றனர். தொடக்க விழா பாப்பிறைப்பண்ணுடன் நிறைவுக்கு வந்தது. கலந்து கொண்ட அனைவருக்கும் General Motors இளைய உரிமையாளர் திரு. பால் ராஜேஷ் தேநீர் கொடுத்து உபசரித்தார். திருமதி. ஏஞ்சலா வியாகப்பன் இறைவேண்டல் செய்தும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியும் உதவினார். நகர்ப்புற பங்குகளிலிருந்து 70 பேர் கலந்து கொண்டனர்.

**R. அந்தோனி வியாகப்பன்**

செயலர்

## 2026 - செப்டம்பர் மாத பணியறிக்கை

### மாதத்தின் முதல் வியாழன் (03.09.26)

மாதத்தின் முதல் வியாழக்கிழமை தோறும் சென்னை நெசப்பாக்கம் புனித அன்னாள் ஆலயத்திலும், வல்லம் பங்கு கொட்டாகுளத்தில் நற்செய்திக் கூடுகை நடைபெற்று வருகின்றது.

### ஆசீர்வாத உபவாசக்கூட்டம் (05.09.26) (12.09.26) (19.09.26)

மாதத்தின் முதல் சனி சிவகிரி பங்கு உற்றாளு ஆலயம், ஆசாரிப்பள்ளம் புனித அன்னாள் மடம்.

மாதத்தின் இரண்டாம் சனி அம்பை புனித சூசையப்பர் ஆலயம், தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலம், கோவில்பட்டி, இலுப்பையூரணி ஆலயம்.

மாதத்தின் மூன்றாம் சனி இருதயநகர் (திருநெல்வேலி), சின்னவிளை (நாகர்கோவில்) போன்ற இடங்களில் ஆசீர்வாத உபவாசக்கூடுகை நடைபெற்றது.

### திருவிழிப்பு செபம்

மாதத்தின் முதல் சனி (12.09.26) புதுவாழ்வு தியான நிலையத்தில் இரவு திருவிழிப்பு செபம் நடைபெற்றது.

### மாலை நேர நற்செய்திக்கூடுகை

ஆலங்குளம், பண்டாரக்குளம், பாவூர்சத்திரம் போன்ற இடங்களில் முதல் வெள்ளிக்கிழமை தோறும் மாலைநேர நற்செய்திக் கூடுகை நடைபெற்றது.

### குணமளிக்கும் நற்செய்திக்கூடுகை

மாதத்தின் மூன்றாம் சனி 19.09.26 புதுவாழ்வு தியான நிலையத்தின் குணமளிக்கும் நற்செய்திக் கூடுகை மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற்றது.

### முழுநேரப்பணியாளர்கள் கூடுகை

22.09.26 செவ்வாய்கிழமை மாலை 5 மணி முதல் 23.09.26 புதன் மதியம் 2 மணி வரை முழுநேரப் பணியாளர்கள் கூடுகை புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

### எழுப்புதல் பரிந்துரை செபம் கூகுள்மீட்

ஒவ்வொரு நாளும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள்மீட் வழியாக 1250 நாட்களைக் கடந்து எழுப்புதல் பரிந்துரை செபம் நடைபெற்று வருகின்றது.

**உள்ளிருப்பு அருட்பொழிவு சீடத்துவ தியானம்**

24,25,26,27 (வியாழன் – ஞாயிறு) தேதிகளில் உள்ளிருப்பு அருட்பொழிவு சீடத்துவ தியானம் சிறப்பாக நடைபெற்றது.

**தூய ஆவியில் புதுவாழ்வு மாதஇதழ்**

இதழ் சுமாரர் 2000 த்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டது.

**புதுவாழ்வு தியான நிலையம்**

முழுநேர மற்றும் தன்னார்வப் பணியாளர்களால் வீடு சந்திப்புப் பணிகளும் நடைபெற்றது. புதுவாழ்வு தியான நிலையத்தில் காலை 6 மணி முதல் இரவு 100 மணி வரை நற்கருணை முன்பாக பரிந்துரை செபமும், தொலைபேசியில் வரும் செபக்கருத்து செபித்தும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. தியான நிலையத்தைத் தேடி வருகின்ற குடும்பங்களுக்கு ஆற்றுப்படுத்துதலும், விசுவாசத்தில் நிலைத்திருக்க செப உதவிகளும் வழங்கப்பட்டன.

**அருட்பணி. V.K.S. அருள்ராஜ்**
செயலர்

## Appointment

Rev. Fr. Joseph Lawrence,
Assistant Parish Priest,
Tenkasi
Date of Birth : 14.06.1985
Date of Ordination : 12.05.2016

## Congratulations

Congratulations to Rev. Deacon LANCE TONY ANTONY SAMY





# தமிழக கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## பாளையங்கோட்டை மறைமாவட்டம்

### செப்டம்பர் மாத அறிக்கை

இம் மாதத்தில் கோவில்பட்டி, தென்காசி, அம்பை மற்றும் பாளையங்கோட்டை மறைவட்டங்களிலுள்ள இளைஞர்களுக்காக போதை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தமர்வு மற்றும் கலைப்போட்டிகள் நடைபெற்றது. இதில் இளைஞர்கள் பல பங்குகளிலிருந்தும் வந்து தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் கருத்தமர்வில் பங்குப்பெற்றும் பயனடைந்தனர்.

| நாள் | மறைவட்டம் | இடம் |
|---|---|---|
| 06.09.2026 | கோவில்பட்டி | புனித பரலோக மாதா திருத்தல பேராலயம், காமநாயக்கன்பட்டி |
| 13.09.2026 | தென்காசி | புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலம், தென்காசி |
| 20.09.2026 | அம்பை | புனித பவுல் திருத்தலம், சிங்கம்பாறை |
| 27.09.2026 | பாளையங்கோட்டை | யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், சாந்திநகர் |

சங்கரன்கோவில் மறைவட்டத்திற்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தமர்வு மற்றும் கலைப்போட்டிகள் வருகின்ற அக்டோபர் மாதம் 4ஆம் தேதி நடைபெறும். இறுதிப் போட்டி 11.10.2026 அன்று V.M. சத்திரம் புனித அந்தோணியார் CBSE பள்ளியில் நடைபெறும்.

**இளம் கத்தோலிக்க மாணக்கர் இயக்கம் (YCS)/ இளம் மாணக்கர் இயக்கம் (YSM)**

இளம் மாணக்கர் இயக்கத்தின் உறுப்பினர்கள் கீழ்கண்ட பள்ளிகளில் சந்திக்கப்பட்டனர்.

<u>பள்ளிகள் சந்திப்பு:</u>

| நாள் | பள்ளி | இடம் |
|---|---|---|
| 01.09.2026 | திருமுழுக்கு யோவான் மேல்நிலைப்பள்ளி | வாடியூர் |
| 01.09.2026 | புனித அமல அன்னை உயர்நிலைப்பள்ளி | றெங்கசமுத்திரம் |

| | | |
|---|---|---|
| 02.09.2026 | புனித அலாய்சியஸ் மேல்நிலைப்பள்ளி | காமநாயக்கன்பட்டி |
| 11.09.2026 | புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி | அலவந்தான்குளம் |

**திருத்தொண்டர்களின் பணிக்குழுக்கள் பயிற்சி அனுபவ முகாம்:**

திருச்சி புனித பவுல் குருத்துவ கல்லூரி திருத்தொண்டர்களின் மேய்ப்புப்பணிக் குழுக்களின் அனுபவ பயிற்சியில் 24.09.2026 வியாழன் அன்று இளைஞர் பணிக்குழுவின் செயல்பாடுகள், இளைஞர் பணியின் இன்றியமையாத தன்மை, இக்கால சவால்கள் பற்றி பகிர்ந்து கொள்ளப்பட்டது. மாலை 3.00 மணிக்கு தூய இஞ்ஞாசியார் மேல்நிலைப்பள்ளி YSM சந்திப்பு நடைபெற்றது. மாலை 7.00 மணிக்கு பல்வேறு பங்குகளிலிருந்து இளைஞர்கள் வருகை தந்து திருத்தொண்டர்களோடு உரையாடி இளைஞர்களின் பணிகள், சவால்கள், திறம்பட செய்வதற்குரிய சாத்திய கூறுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இரவு உணவோடு நிகழ்வு இனிதே நிறைவை எட்டியது.

**அருட்பணி. விக்டர் ராஜ் ம.**
செயலர்

## பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு

**2026 - ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாத பணியறிக்கை**

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுவின் செயல்பாட்டு அறிக்கை.

நெட்டூர் தலித் கிறிஸ்தவ மக்கள் மீது சாதி வெறியர்களின் கொலைவெறி தாக்குதல் காரணமாக நெட்டூர் கிராம மக்கள் மற்றும் அதன் சுற்றி உள்ள தலித் கிராம மக்களை ஒருங்கிணைத்து மாபெரும் திரள் முற்றுகை போராட்டம் **03.06.2026** அன்று தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பாக பெருந்திரள் முறையிட்டு ஆர்பாட்டமானது சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது. மக்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு செயலர் தந்தை A. ஜீவா அவர்கள் தலைமையில்

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி, தென் மண்டல தலித் கிறிஸ்தவர் விடுதலை இயக்கம், நாம் தமிழர் கட்சி, புதிய தமிழகம் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், தமிழ் புலிகள் கட்சி, ஆதித்தமிழர் பேரவை, தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் உறவின்முறை கூட்டமைப்பு மற்றும் பல்வேறு சமூக இயக்கங்களும் இந்த போராட்டத்தில் சிறப்பாக கலந்து கொண்டனர். தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில தலைவர் தோழார் சாமுவேல்ராஜ் அவர்கள், தென்மண்டல தலித் கிறிஸ்தவர் விடுதலை இயக்க தலைவர் திரு. இளோசியஸ் அவர்கள், மற்றும் தென்மண்டல நமது பணிக்குழுவின் மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் மற்றும் பல்வேறு சமூக இயக்க பொறுப்பாளர்கள் தலைவர்கள் முன்னிலையிலும் பெருந்திரள் முறையிட்டு போராட்டம் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது. இந்த முறையிட்டு போராட்டத்தில் வீராணம், நெட்டூர், அருணாச்சலபுரம், சீதைக்குறிச்சி, தெற்குபட்டி, கலக்குடி, உக்கிரன்கோட்டை, ரெட்டியார்பட்டி, காவலாகுறிச்சி, கீழக்கலங்கள் ஆகிய பகுதிகளில் இயங்கி வரக்கூடிய மக்கள் மன்ற தலைவர்களும் உறுப்பினர்களும் உட்பட 500 க்கும் மேற்ப்பட்டோர் திரளாக பங்கு பெற்றனர் தொடர்ந்து தமிழக அரசு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு சால்சேதான் அவர்களிடமும் மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டது. பெண்கள் சார்பாக 200 கோரிக்கை மனுக்களை தென்காசி மாவட்டம் சப்கலெக்டர் வைஷ்ணவி பவுல் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணியகம் சார்பாக 27.06.2026 அன்று ஜூபிலி மேய்ப்புப்பணி மையத்தில் காலை 10.30 மணிக்கு இணைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டமானது செயலர் தந்தை அருட்பணி. A. ஜீவா அவர்கள் செபத்துடன் தொடங்கி வைத்தார்கள். இணைக்கல்வி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் ஆரோக்கியசாமி அவர்கள் இன்றைய சூழலில் மாணவர்களின்

அறிவாற்றல் மற்றும் கல்வி வளர்ச்சி குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இணைக்கல்வி ஆசிரியர்களுக்கு நான்கு மாத ஊக்கத்தொகையும், பயணத்தொகையும் செயலர் அருட்பணி. A. ஜீவா அவர்கள் வழங்கி இணைக்கல்வி ஆசிரியர்களின் பணியை பாராட்டினார். ஆசிரியர்கள், பணியாளர்கள் உட்பட 80 பேர் பங்கேற்று சிறப்பு செய்தனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணியகம் சார்பாக 22.07.2026 அன்று காலை 10.30 மணிக்கு ஜூபிலி மேய்ப்புப்பணி மையத்தில் பணிக்குழு அலுவலகத்தில் செயலர் தந்தை தலைமையில் தென் மண்டல செயல்களுக்கான திட்டமிடல் கூட்டம் நடைபெற்றது. ஆகஸ்ட் 10 ஆர்ப்பாட்டம் நடத்துவது குறித்தும் அடுத்த கட்ட செயல்பாடுகள் குறித்தும் கூட்டம் நடைபெற்றது.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு மற்றும் உதயம் கல்வி அறக்கட்டளையின் சார்பாக 05.08.2026 அன்று வீராணம் தூய குழந்தை திரேசா ஆலய வளாகத்தில் பெண்கள் தொழில் முனைவோர்களுக்கான தொழில் பயிற்சி தொடக்க விழா ஊத்துமலை பங்கு தந்தை அருட்பணி. அருள் மரிய நாதன் தலைமையிலும், பணிக்குழுவின் செயலர் A. ஜீவா அடிகளார் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் பெண்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட 20 பேர் கலந்து கொண்டனர். தற்போது 17 நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு தென்மண்டல அளவில் கோட்டார், குழித்துறை, பாளையங்கோட்டை ஆகஸ்ட் 10 கருப்பு நாள் கவன ஈர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டம் 10.08.2026 அன்று வண்ணாரப்பேட்டை செல்லப்பபாண்டியன் சிலை அருகில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 800 க்கும் மேற்பட்ட தலித் கிறிஸ்தவர்களும் பொது சமூகத்தினரும் மண்டல அளவில் கலந்து கொண்டனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணியகம் சார்பாக 24.08.2026 அன்று பணிக்குழு அலுவலகத்தில் செயலர் தந்தை அருட்பணி. A. ஜீவா அவர்கள் தலைமையில் முனைவர். ராம்நாத் முன்னிலையில் NDCL சமத்துவ சிந்தனையாளர்கள் கூட்டம் நடைபெற்றது. பணியாளர்கள் உட்பட 20 பேர் பங்கேற்றனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு 27வது பொதுக்குழு கூட்டம் உடையார்பட்டி வானவில் திருமண மண்டபத்தில் 06.09.2026 அன்று காலை 10.30 மணிக்கு பாளையங்கோட்டை மறைமாவட்ட பரிபாலகர் பேரருள் தந்தை M. மோட்சராஜன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. பணிக்குழு செயலர் அருட்பணி. ஜீவா அடிகளார் ஏற்பாட்டில் பொதுக்குழு நடைபெற்றது. இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மக்கள் மன்ற பொறுப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட 180 பேர் கலந்து கொண்டனர். சிறப்பு கருத்துரையாளராக அருள்முனைவர் அருட்சகோதரி ரொபான்ஸி ஹெலன் மற்றும் சிறப்பு எழுச்சி உரையாக தோழர் ஜெயசீலன் (தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில செயலாளர்) மற்றும் தலித் கிறிஸ்தவர் விடுதலை இயக்க தலைவர். இலோசியஸ், பொருளாளர் திருமிகு. கனகராஜ் கௌரவ அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

06.09.2026 அன்று காலை உடையார்பட்டி வானவில் திருமண மண்டபத்தில் பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு பழங்குடியினர் பணிக்குழுவின் சார்பாகவும், தமிழக ஆயர்கள் பேரவையின் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுவின் உதவியுடன் நமது மறைமாவட்டத்தில் தொழிற்கல்வி கற்றுவரும் 22 மாணவர்களுக்கு ரூ. 54,700/– உதவித் தொகையை பாளையங்கோட்டை மறைமாவட்ட பரிபாலகர் பேரருள் தந்தை M. மோட்சராஜன் அடிகளார் அவர்கள் வழங்கி மாணவர்களுக்கு ஆசியுரை வழங்கினார்கள்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் 19.09.2026 அன்று யூபிலி மேய்ப்புப்பணி மையத்தில் காலை 10.30 மணிக்கு உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்கான பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை பணிக்குழுவின் செயலர் தந்தை அவர்கள் நோக்கவுரையாற்றி தொடங்கி வைத்தார்கள். தமிழக மக்கள் நல கட்சியின் மாநில பொறுப்பாளர் டாக்டர். ராம்நாத் அவர்கள் கலந்து கொண்டு வருகின்ற தேர்தலை நாம் எவ்வாறு சந்திப்பது, எந்த அணியில் நாம் இணைந்து நிற்பது, என்பது பற்றியான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. 30 பேர் கலந்து கொண்டனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு 23.09.2026 அன்று நமது மறைமாவட்டத்திற்கு வருகை தந்துள்ள அருட்சகோதரர்களுக்கு ஒவ்வொரு பணிக்குழுவின் செயல்பாடுகளும் குறித்து அவர்களுக்கு விளக்கி வருகின்ற நிலையில், நமது பணி குழுவின் சார்பாக நடைபெறுகின்ற செயல்பாடுகள் போராட்டங்கள் குறித்து பகிர்வு நடைபெற்றது. ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த பணிக்குழுவின் செயல்பாடுகளை PPT வழியாக மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களும் திரு. அந்தோணிராஜ் தென்காசி மறைவட்ட ஒருங்கிணைப்பாளர் இணைந்து விளக்கி கூறினார்கள்.

**அருட்தந்தை. A. ஜீவா**
செயலர்

## கத்தோலிக்க நற்செய்தி பணிக்குழு

### பணியறிக்கை - செப்டம்பர் 2026

செப்டம்பர் 03, 04 & 05 (வெள்ளி, சனி & ஞாயிறு) சிமியோன் மூத்தோர் தியானம் அன்னை தெரசா மண்டபம், தூய அந்தோனியார் மறைமாவட்ட திருத்தல வளாகத்தில் நடைபெற்றது. பேரருட்திரு.மோட்சராஜன், அருள்திரு.ஜெமல்ஸ், அருள்திரு.ரூபஸ்S.J திருப்பலி நிறைவேற்றினார்கள்.

அருள்திரு. V.K.S.அருள்ராஜ் தொடங்கி வைத்தார்கள். சகோ.ராஜேந்திரன், டிவைன் தியானமையம், சாலக்குடி மற்றும் குழுவினர் இறைசெய்தி வழங்கினார்கள். அருட்சகோதரி.டீன்ஷா, சென்னை சாட்சி கூறினார்கள். ஏறக்குறைய 200 பேர் கலந்து புத்துயிர் பெற்று மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றனர்.

செப்டம்பர் 11, 18 & 25 வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 மணி வரை குணமளிக்கும் செபம் பாளை மறைமாவட்ட தூய அந்தோனியார் திருத்தல மண்டபத்தில் நடைபெற்றது. ஏறக்குறைய 100 பேர் கலந்து கொண்டு ஆன்ம பலமும் உடல் நலமும் பெற்றனர்.

செப்டம்பர் 20, ஞாயிறு உபவாச கூட்டம் காலை 11 மணி முதல் மாலை 04.30 மணி வரை பாளை மறைமாவட்ட தூய அந்தோணியார் திருத்தல மண்டபத்தில் நடைபெற்றது. 150 பேர் கலந்து பயன் பெற்றனர். அருட்சகோதரி.புஷ்பலதா SCB, பெங்களுர் இறைசெய்தி வழங்கினார். அருட்திரு. ஜான் கென்னடி SHS நற்கருணை ஆராதனை நடத்தி, திருப்பலி நிறைவேற்றினார்.

செப்டம்பர் 26, சனி இரவு திருவிழிப்பு செபம் பாளை மறைமாவட்ட தூய அந்தோணியார் திருத்தல மண்டபத்தில் நடைபெற்றது. அருட்திரு. அந்தோணி பாஸ்கர், சேலம் மற்றும் குழுவினர் வழிநடத்தினர்.

**அருள்திரு. V.K.S.அருள்ராஜ்**
செயலர்

## அன்பியப் பணிக்குழு

**பணியறிக்கை - செப்டம்பர் 2026**

**அன்பிய சந்திப்பு**

| நாள் | இடம் | சந்தித்த அன்பியங்கள் |
|---|---|---|
| 12.09.2026 சனிக்கிழமை | துறையூர், சங்கர் நகர் பங்கு | 8 அன்பியங்கள் |
| 16.09.2026 புதன்கிழமை | பண்டாரக்குளம் & கட்டளையூர், பண்டாரக்குளம் பங்கு | 5 அன்பியங்கள் |

## செயலர்கள் கூட்டம்

தமிழக ஆயர் பேரவையின் அன்பிய பணிக்குழுவால் கோயம்புத்தூர், ஜீவ ஜோதி ஆசிரமத்தில் 15.09.2026 அன்று நடத்தப்பட்ட, மாநில அளவிலான செயலர்களுக்கான கூட்டத்தில், பணிக்குழு செயலர் அருட்பணி. அ. பீற்றர் அவர்கள் கலந்துகொண்டார்கள். அக்கூட்டத்தில் 2026 ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய மாதங்களுக்கான பணியறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் பணிக்குழுவின் வெள்ளிவிழா சார்ந்த நிகழ்வுகள் குறித்து விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

## திருத்தொண்டர்கள் முகாம்

திருச்சியிலுள்ள புனித பவுல் குருமடத்திலிருந்து 16 திருத்தொண்டர்கள் அருட்பணி. ரமேஷ் அவர்கள் தலைமையில் 19.09.2026 மாலை முதல் 27.09.2026 மதியம் வரை யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், தேம்பாவணித் தோட்டத்தில் தங்கியிருந்து, பணிக்குழுக்களைச் சந்தித்து, அதன் செயல்பாடுகளைப் பற்றி அறிந்துகொண்டனர். அன்பியப் பணிக்குழு சார்பாக, 22.09.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலை 8:30 மணிமுதல் 9:45 மணிவரை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் அமைப்பு முறை மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் திரு. ஜான் இருதயராஜ், திரு. சேவியர் அமல்ராஜ், திரு. போஸ்கோ, திருமதி. ஜனதா மற்றும் திரு. பெல்லார்மின் ஆகியோர் கலந்துகொண்டு அன்பியங்கள் தங்கள் பங்கில் ஏற்படுத்திய தாக்கங்கள், அன்பியங்களை சிறப்பாக நடத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். மாலையில் ஜவர் நகர் பங்கில் 4 அன்பியங்களையும் இருதய நகர் பங்கில் 2 அன்பியங்களையும் பாளைப் பேராலயப் பங்கில் 2 அன்பியங்களையும் சந்தித்து, அன்பியக்கூட்டங்களைப் பார்வையிட்டு, அன்பிய செயல்பாடுகள் பற்றி அறிந்து, அன்பியக் குடும்பங்களை ஊக்கப்படுத்தினர். இந்நிகழ்வு திருத்தொண்டர்களுக்கு சிறப்பான அனுபவமாக அமைந்தது.

அருட்பணி. அ. பீற்றர்,
செயலர்.

# குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

**செப்டம்பர் மாதப்பணியறிக்கை - 2026**

### 1. திருமண முன்தயாரிப்பு பயிற்சி

| | | |
|---|---|---|
| ஆண்கள் | – | 30 பேர் |
| பெண்கள் | – | 30 பேர் |
| மொத்தம் பங்கேற்றவர்கள் | – | 60 பேர் |

### 2. திருமண தகவல் நிலையம்

| | | |
|---|---|---|
| பதிவு செய்தவர்கள் | – | 31 பேர் |
| பார்வையிட்டவர்கள் | – | 74 பேர் |
| திருமணம் ஏற்பாடாகியுள்ளோர் | – | 11 பேர் |

### 3. திருமண முன் தயாரிப்புப் பயிற்சி விபரம்

| | |
|---|---|
| அக்டோபர் 2026 | 02, 03.10.2026 முதல் வெள்ளி, சனி |
| | காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| | 16, 17.10.2026 மூன்றாம் வெள்ளி, சனி |
| | காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| நவம்பர் 2026 | 06, 06.11.2026 முதல் வெள்ளி, சனி |
| | காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| | 20, 21.11.2026 மூன்றாம் வெள்ளி, சனி |
| | காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |

அன்புடன்

**அருட்பணி. ஜெமல்ஸ் ஜேம்ஸ்**

செயலர்

## This Month Collection

Mission Sunday – For Evangelization Mission all over the World Last but one Sunday in October – 18.10.2026

**Rev.Fr.C.Deepak Michael Raja, Procurator**

**Mission Sunday**

The Mission Sunday envelops and calendars are available at Bishop's House.

Kindly collect them from the Bishop's House office.

## திருநெல்வேலி சமூக சேவை சங்கம், பாளையங்கோட்டை

**செப்டம்பர் - 2026 பணியறிக்கை**

**கோல்பிங் இந்தியா**

- 01.09.2026 வழ 02.09.2026 ஆகிய இரண்டு நாட்கள் காஞ்சிபுரம் கோல்பிங் அலுவலகத்தில் வைத்து Safeguarding Workshop குறித்த கூட்டம் நடைபெற்றது. இதில் கோல்பிங் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் இரண்டு பேர் கலந்து கொண்டனர்
- 10.09.2026 வழ 11.09.2026 ஆகிய தேதிகளில் கொச்சியில் நடைபெற்ற இயக்குநர்களுக்கான Safeguarding Workshop குறித்த கூட்டத்தில் இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டனர்
- 14.09.2026 அன்று சிங்கம்பாறை - அசிசி குழு கூட்டம் நடத்தி கோல்பிங் திட்டங்களை பற்றி திட்டப் பொறுப்பாளார் விளக்கம் கொடுத்தார்.
- சண்முகநாதபுரம் கிராமத்தில் புனித சேவியர் என்ற புதிய குழு ஆரம்பிக்கப்பட்டது

**சங்கமம் மற்றும் சிறுகடன் திட்டம்**

- சங்கமம் தொடர்பாளர் கூட்டம் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது. கணக்காளர்கள் கலந்துகொண்டு சேமிப்பு செலுத்திகடன் பெற்றுச் சென்றனர்.

சிறுகடன் திட்டத்தில் இம்மாதம் 18 குழுக்களைச் சார்ந்த 236 நபர்கள் பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன் பெற்றனர் மேலும் தனிநபர் கடன் இம்மாதம் 193 பேருக்கு கொடுக்கப்பட்டது.

**நெல்லைசங்கமம்**

- ✷ நெல்லை சங்கம நிதி நிறுவனத்தில் இம்மாதம் 16 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**இதர செயல்பாடுகள்**

- ✷ 10.09.2026 அன்று கயத்தார் விண்ணரசி தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து கயத்தார் மேற்கு ஒன்றிய செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டமைப்பின் செயல்பாடுகள், குழுவின் ஒற்றுமை மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.
- ✷ தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி சமூக சேவை சங்கம் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் 14.09.2026 அன்று இளையரசனேந்தல் கிராமத்திலும் 25.09.2026 அன்று பொட்டல்புதூர் R.C.பள்ளி வளாகத்திலும் நடைபெற்றது. இதில் 124 நபர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.
- ✷ 16.09.2026 அன்று மாநகர பெண்கள் கூட்டமைப்பு நலவாழ்வு கருத்தரங்கு TSSS அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டம் இயக்குநர் தலைமையில் நடைபெற்றது இதில் 78 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உறுப்பினர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.
- ✷ 25.09.2026 அன்று தூய பவுல் குருத்துவ திருத்தொண்டர்களுக்கு TSSS அலுவலகத்தல் வைத்து TSSS மற்றும் சரணாலய இயக்குநர் தந்தை அவர்கள் TSSS மற்றும் சரணாலய திட்டங்களை பற்றிய விளக்கங்களை தெரிவித்தார்கள்.

**அருட்திரு.S.பிரான்சிஸ் சேவியர்**
இயக்குநர்

## செப்டம்பர் - 2026 பணியறிக்கை

1. **குழந்தைகள் வரவேற்பு பிரிவில்** புதிதாக 10 சிறுவர்கள், 23 சிறுமியர் என மொத்தம் 33 பேர் இல்லத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைத் தொடர்வதற்காக 5 குழந்தைகள் பிற இல்லங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது 09 சிறுமியர், 08 சிறுவர்கள் என மொத்தம் 17 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

2. **குழந்தைத் தத்து திட்டத்தில்** இம்மாதம் 1 பெண் குழந்தை தத்து கொடுக்கப்பட்டுள்ளது. 1 ஆண் குழந்தை இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இல்லத்தில் 3 ஆண், 6 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

3. **திறந்த நிலைப் புகலிடத் திட்டத்தில்** புதிதாக 2 சிறுமியர்கள் மட்டும் இல்லத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாதம் 15 கிராமங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 12 சிறுமியர், 9 சிறுவர்கள் என மொத்தம் 21 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

### <u>சிறப்பு நிகழ்வுகள்</u>

* 03.09.2026 அன்று மாவட்ட அளவிலான ஆய்வு குழு உறுப்பினார்களால் இல்லம் ஆய்வு செய்யப்பட்டது. இதில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், குழந்தை நலக்குழு உறுப்பினர், சுகாதார துறை அலுவலர் ஆகியோர்கள் கலந்து கொண்டு திட்ட ஆவணங்களை சரிபார்த்தனர்.
* 04.09.2026 அன்று இல்ல வளாகத்தில் ஆசிரியர் தின விழா இல்ல குழந்தைகளோடு கொண்டாடப்பட்டது.
* 22.09.2026 அன்று இல்ல குழந்தைகளை அரசு பொருட்காட்சிக்கு அழைத்து செல்லப்பட்டது
* 24.09.2026 அன்று மருத்துவர் திரு.செல்வராஜ் அவர்கள் மூலம் இல்ல குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

**அருட்திரு. அ. ஞானதினகரன்**
**இயக்குநர்.**

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## பணியறிக்கை - செப்டம்பர் 2026

### I. காலாண்டுத் தேர்வு:

மறைமாவட்ட மற்றும் துறவற சபையை சார்ந்த பள்ளிகள் அனைத்திலும் 1 முதல் 12 வரையிலான மறைக்கல்வி, நல்லொழுக்க வகுப்புகளுக்கு 15.09.2026 திங்கள்கிழமை காலாண்டுத் தேர்வு நடத்தி முடிக்கப்பட்டது.

### II. பள்ளி சந்திப்பு:

ஐந்து மறைவட்டங்களிலும் பள்ளிகள் சந்திக்கப்பட்டு மறைக்கல்வி, நல்லொழுக்கம் கற்கும் மாணவர்களையும், கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி அவர்களுக்கு மாதிரி வகுப்புகள் விவிலிய விளையாட்டுக்கள், கதைகள், பாடல்கள் வழியாக மறைக்கல்வி வகுப்புகள் இன்னும் உத்வேகம் பெற ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### III. மாபெரும் விவிலிய வினாடி வினா போட்டி (Bible Quiz):

லூக்கா நற்செய்தி நூலிலிருந்து தயாரிக்கப்பட்ட 10 சுற்றுகளை கொண்ட விவிலிய வினாடி வினா போட்டி 20.09.2026 ஞாயிறன்று தூத்துக்குடி மறைமாவட்டம் செய்துங்கநல்லூர் பங்கில் நடத்தித் தரப்பட்டது. இப்போட்டிகள் அனைத்தும் புதிய வடிவிலான கானொலி காட்சிகளைக் கொண்டதாக அமைந்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

### IV. பாலர்சபை - பரிவின்சபை சிறார் பயிற்சி பாசறை:

இந்த ஆண்டு பாலர்சபை - பரிவின்சபை என்ற மையச்சிந்தனையின் அடிப்படையில் 8-ம் வகுப்பு வரையிலான சிறார்களுக்கு 5 மறைவட்ட அளவில் பயிற்சி பாசறை நடத்தப்பட்டு வருகிறது. நான்காவது மறைவட்டமாக கோவில்பட்டி மறைவட்டத்தில் 26.09.2026 சனிக்கிழமை நடத்தப்பட்டது. மொத்தம் 180 சிறார்களும், 25 ஒருங்கிணைப்பாளர்களும் கலந்து கொண்டனர். இவர்களுக்கு கடுகுவிதை சிறார் நற்செய்தி குழுவினர் பொம்மலாட்டம், மேஜிக்ஷோ, விவிலிய

விளையாட்டுக்கள், அபிநயப் பாடல்கள், விவிலிய கதைகள், அட்டைப்பட வரைபடங்கள் மூலமாக சிறார்களுக்கு பரிவு (இரக்கம்) என்பது எப்படி இருக்க வேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையில் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் புனிதத்தில் வாழ்ந்த பாலகர்கள், விவிலியத்தில் பரிவுகாட்டும் பாலகர்கள், திருவழிபாட்டில் பாலகர்களில் 10 செயல்பாடுகள் போன்ற தலைப்புகளில் குழந்தைகள் எளிதில் புரியும்படியாக வரைபடங்கள் மற்றும் Powerpoint Presentation வழியாக வேதியர்களால் கற்றுத்தரப்பட்டது. இப்பயிற்சி பாசறையை வாழ்த்துரை வழங்கி தொடங்கி வைத்தவர் நாலாட்டின்புதூர் பங்கு புனித சகாய அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி. M. ஜான் டி பிரிட்டோ MSFS அவர்கள்.

## V. பணி பகிர்வு:

களப்பணிகளுக்காக வந்திருந்த பல்வேறு மறைமாவட்டங்களைச் சார்ந்த திருத்தொண்டர்கள் 16 பேருக்கு கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு உள்ளடக்கிய மறைக்கல்வி, விவிலியம், திருவழிபாடு, பாலர்சபை பணிகள் குறித்த ஓராண்டு பணிப் பகிர்வையும், அதன் செயல் திட்டங்களையும் தெளிவான விளக்கங்களுடன் Powerpoint Presentation வழியாக செயலர் தந்தை அவர்கள் வழங்கினார்கள். இது திருத்தொண்டர்களுக்கு பயன்மிக்கதாக அமைந்திருந்தது.

## VI. பங்குப் பணிகள்:

1. ஆவுடையானூர் பங்கு கொண்டலூர் கிளைக் கிராமத்தில் திருவிழா திருவழிபாட்டு தயாரிப்பு, பாடல் பயிற்சி அளிக்கப்பட்டது.
2. வீரவநல்லூர், பண்டாரக்குளம் பங்குத் தளங்களில் விவிலிய திருவிழாவிற்கு முன்தயாரிப்பு செய்து கொடுத்து போட்டிகள் வழிநடத்தப்பட்டது.

**அருட்பணி. ச. லூர்து மரிய சுதன்**
செயலர்

# ஆயரின் நல நிதிகள்

**செப்டம்பர் - 2026**

| குரு மாணவர் நல நிதி | |
|---|---|
| திரு. ஜாண் பிரிட்டோ | 6,000.00 |
| திருமதி. எலிசபெத் பிலிப், பாளையங்கோட்டை | 500.00 |
| திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | 7,000.00 |
| இம்மாதம் வழங்கியது | **7,000.00** |
| **ஏழை மாணவர் கல்வி நிதி** | |
| முன் கையிருப்பு | 26,437.00 |
| இம்மாதம் வழங்கியது | 20,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **6,437.00** |
| **குடும்ப நல நிதி** | |
| முன் கையிருப்பு | 3,98,557.00 |
| இம்மாதம் வழங்கியது | 30,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **3,68,557.00** |
| **மருத்துவ நல நிதி** | |
| மொத்த இருப்புத்தொகை | **2,896.00** |
| **நற்செய்திப் பணி நிதி** | |
| முன் கையிருப்பு | 3,81,370.00 |
| திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | **3,81,870.00** |

## BISHOP EMERITUS JUDE PAULRAJ'S ENGAGEMENTS

**October - 2026**

| Date | Time | Programme |
|---|---|---|
| 01.10.2026 | 09.30 A.M. | Meeting of the YES/YSM Formation full timers, Trichy |
| 03.10.2026 | 07.00 P.M. | Vespers, Thisaiyanvilai |
| 04.10.2026 | 06.30 A.M. | Mass, Adoration Monastery |
| | 06.30 P.M. | Feast Mass, Arulagam |
| 06.10.2026 | 06.30 P.M. | Vespers, Duraikudieruppu |
| 11.10.2026 | 11.00 A.M. | Memorial Mass, Votive Shrine |
| 12.10.2026 to 17.10.2026 | | Personal Retreat, Sogathur |
| 18.10.2026 | 10.00 A.M. | Baptismal Mass, Palayakovil |
| 19.10.2026 | 11.00 A.M. | Jubilee and 1st Holy Communion Mass, Cathedral |
| 21.10.2026 | 09.00 A.M. | Wedding Mass, Tharuvaikulam |
| 24.10.2026 | 11.00 A.M. | House Blessing, Chidambaranagar |
| 25.10.2026 | 06.45 A.M. | Feast Mass, Maharajanagar |
| 30.10.2026 | 10.00 A.M. | Wedding Mass, Cathedral |

**+ Jude**



October 1

*Happy Feast Day*

# St. Therese

## of the Child Jesus!



*Happy Feast Day*

**St. Francis of Assisi**

October 4

**For Private Circulation only**

Edited & Published by

REV. FR. XAVIER DEVASAGAYAM

CHANCELLOR, CATHOLIC BISHOP'S HOUSE, P.B.No. 108, PALAYAMKOTTAI-2

e-mail : chancellor@palayamkottaidiocese.org

Web : www.palayamkottaidiocese.org

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/